செ.வெ.எண்:15 நாள்:12.08.2020

**கரூர் மாவட்டம்**

**கரூர் காந்திகிராமம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் செயல்பட்டு வரும் கொரோனா வைரஸ் தொற்றினை கண்டறியும் பிசிஆர் (PCR LAB) பரிசோதனை மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள், திடீர் ஆய்வு மேற்கொண்டார்.**

அதன் விவரம் வருமாறு:

கரூர் காந்திகிராமம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் செயல்பட்டுவரும் கொரோனா வைரஸ் தொற்று கண்டறியும் பி.சி.ஆர் பரிசோதனை மையத்தினை **(PCR LAB)** மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள், இன்று (12.08.2020) திடீர் ஆய்வு மேற்கொண்டு வைரஸ் தொற்று தொடர்பாக பதிவு செய்யப்பட்ட பதிவேடுகள் மற்றும் தொற்று கண்டறியும் முறைகள் குறித்து பார்வையிட்டார்.

இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,

உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸ் தொற்று பரவலை கட்டுப்படுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கரூர் மாவட்டத்தில் போர்க்கால அடிப்படையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி 50 வீடுகளுக்கு ஒரு நபர் என்ற வகையில் சுகாதாரத்துறை, வருவாய்த்துறை மற்றும் வளர்ச்சித்துறை அலுவலர்கள் நியமிக்கப்பட்டு யாருக்கேனும் சளி, காய்ச்சல், இருமல் உள்ளிட்ட அறிகுறிகள் உள்ளதா என்று களஆய்வு செய்து வருகின்றார்கள்.

பொதுமக்களுக்கு உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் வல்லமை கொண்ட, நம் முன்னோர்களால் வழிவழியாக கடைபிடிக்கப்பட்ட சித்தமருத்துவ முறைப்படி, 15 வகையான மூலிகைகளின் கலவையாக உருவாக்கப்பட்ட கபசுரக் குடிநீரை பொதுமக்களின் வீட்டிற்கே சென்று களப்பணியாளர்கள் மூலம் வழங்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில், தமிழக அரசின் அறிவுரையின்படி தொற்று பாதிப்புள்ள பகுதிகளில் கொரோனா தொற்று தடுப்பு மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலான சிறப்பு மருத்துவ முகாம்கள் முழு வீச்சில் தினந்தோறும் நடத்தப்பட்டு வருகின்றது.

கரூர் மாவட்டத்தில் உள்ள 8 ஊராட்சி ஒன்றியங்களில் 32 ஆரம்ப சுகாதாரநிலை மருத்துவர்குழுக்கள், 4 நடமாடும் மருத்துவக்குழுக்கள், 16 பள்ளி சிறார்கள் பரிசோதனை மருத்துவக்குழுவினர் மற்றும் 5 நகர ஆரம்ப சுகாதாரநிலை மருத்துவர்குழுக்கள் என 57 மருத்துவக்குழுவினர்கள் தொடர்ந்து மாவட்டம் முழுவதும் ஊரகப்பகுதியில் சிறப்பு மருத்துவ முகாம்களை நடத்தி வருகிறார்கள். ஒரு குழுவில் ஒரு மருத்துவ அலுவலர், ஒரு செவிலியர், ஒரு மருந்தாளுநர் மற்றும் ஒரு உதவியாளர்கள் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஒரு முகாமில் சராசரியாக 70 முதல் 90 நபர்களுக்கு மருத்துவப்பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மருத்துவ முகாம்கள் நடைபெறும் பகுதிகளில் முன்னதாகவே, சிறப்பு முகாம் நடைபெறும் தகவலை பொதுமக்களுக்கு அறிவிக்கும் வகையில் வீதி வீதியாக மைக் மூலம் அறிவித்து சுகாதாரத்துறையினரால் விழப்புணர்வு ஏற்படுத்தப்படுகின்றது. இந்த சிறப்பு முகாம்கள் நடைபெறும் பகுதிகளில் உள்ள மக்களில் சளி, காய்ச்சல், இருமல் உள்ளவர்கள், முச்சுவிட சிரமப்படுபவர்கள், தூய்மைப்பணியாளர்கள், கர்ப்பினி

பெண்கள், வயதில் மூத்த நபர்களுக்கு முக்கியத்தும் கொடுத்து பரிசோதனை நடத்தி வருகிறார்கள்.

மருத்துவப்பரிசோதனை மட்டுமன்றி, அப்பகுதியில் தொற்று பாதித்த நபரின் வீடு இருப்பின் அவரது வீட்டைச் சுற்றிலும் உள்ள வீடுகளில் உள்ள நபர்களுக்கும், தொற்று பாதித்த நபர் பழக்கம் வைத்திருந்த நபர்களுக்கும் சளிமாதிரி பரிசோதனை எடுக்கப்படுகின்றது.

அவ்வாறு பரிசோதனை எடுக்கப்படும் நபர்களின் மாதிரிகள் கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தமிழக அரசால் அனுமதியளிக்கப்பட்டுள்ள பி.சி.ஆர் பரிசோதனை மையத்தில் பரிசோதிக்கப்படுகின்றது. நமது மாவட்டத்திற்கு மட்டுமல்ல அருகில் உள்ள மாவட்டங்களுக்கும் வரப்பிரசாதமாக கரூர் மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை விளங்கிவருகின்றது. இந்த பரிசோதனை மையத்தில் ஒரு நாளைக்கு சராசரியாக 350 முதல் 400 மாதிரிகள் பரிசோதனை செய்யப்படுகின்றது. கரூர் மட்டுமல்லாது திண்டுக்கல், நாமக்கல் உள்ளிட்ட அருகில் உள்ள மாவட்டங்களில் இருந்து வரும் மாதிரிகளும் பரிசோதிக்கப்படுகின்றது,

மாதிரி முடிவுகளின் அடிப்படையில், தொற்றுக்கான அறிகுறிகளுடன் தொற்று பாதிப்பு உள்ள நபர்களை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலும், தொற்றுக்கான அறிகுறிகள் ஏதும் இல்லாமல் தொற்று பாதிப்பு உள்ள நபர்களை அரசு மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு சித்த மருத்துவ சிகிச்சைப்பிரிவிலும் அனுமதிக்கப்பட்டு சிறப்பான சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

கொரோனா தொற்று பரவல் தடுப்பு பணியில், மருத்துவர்கள், காவல்துறையினர், வருவாய்த்துறை, வளர்ச்சித்துறை, உள்ளாட்சித்துறை உள்ளிட்ட அனைத்துத்துறை அரசு அலுவர்கள் 24 மணிநேரமும் அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியில் ஈடுபட்டு, பாடுபட்டு வருகின்றனர். பொதுமக்கள் சமுதாயப்பொறுப்பை உணர்ந்து அரசு விதிமுறைகளைக் கடைபிடித்து சமுக விலகலை கடைபிடித்து, முககவசம் அணிந்து, அடிக்கடி கைகளை சோப்பு போட்டு கழுவி தங்களையும் காத்து சமுதாயத்தையும் காக்க ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது மரு.முருகவேல்ராஜா, மரு.தெய்வநாயகம், பரிசோதனை மைய மருத்துவ அலுவலர் மரு.சௌந்தர்யா, கரூர் வட்டாட்சியர் திருமதி.அமுதா உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**